**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 03/2022</u>**

நாள் 04.03.2026

DW3 – சுப்பிரமணியம்

த/பெ – கருப்பண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of March 2026)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1.எனக்கு வெள்ளியம்பதி கிராமத்தில் சர்வே எண்.22/1, 22/2, சர்வே எண்.23 ஆகிய காலைகளில் எனக்கு ஒன்றரை ஏக்கர் பூமி உள்ளது. தாவா சொத்து விருமாண்டம்பாளையம் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து எனது வீட்டில் இருந்து அரை கி.மீ தூரத்தில் உள்ளது. வாதி மாணிக்கவாசகத்தை தெரியும். பொன்னுசாமி என்பவர் வாதி மாணிக்கவாசகத்தின் தாத்தா ஆவார். அந்த பொன்னுசாமி சுமார் 10,15 வருடங்களுக்கு முன்பாகவே இறந்துபோய்விட்டார். அவருக்கு மணியப்பன் மற்றும் முருகேஷ்வரி ஆகிய இரண்டு மக்கள். பொன்னுசாமி மனைவி எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. வாதி மாணிக்கவாசகம் எந்த விலாசத்தில் வசித்து வருகிறார் என்றால் நொச்சிக்காடு ஊரில் வசித்து வருகிறார்.

2. இந்த வழக்கு 1ம் பிரதிவாதி நடராஜனின் அண்ணன் விநாயகமூர்த்தி மீதும் வழக்கு போடப்பட்டுள்ளது தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் 40 சென்ட் பங்கு கேட்டு வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் பழைய சர்வே.எண்.251. அதன் மொத்த விஸ்தீரணம் 7.84 ஏக்கர். ஆரம்பத்தில் அந்த 7.84 ஏக்கர் சொத்து யார் யாருக்கு எவ்வளவு பாத்தியப்பட்டிருந்தது

என்றால் அது எனக்கு தெரியாது. அந்த சொத்து 10 உட்பிரிவுகளாக ஏற்பட்டுள்ளது. அந்த உட்பிரிவுகள் படி யார் யாருக்கு எவ்வளவு பங்கு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் 1ம் பிரதிவாதி நடராஜுக்கு ரீ.சர்வே எண்.33/7, 8, 9, 10, 11 உட்பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. பொன்னுசாமிக்கு சொத்து பாக கறார் மூலமும், அவரது தம்பி முத்துசாமியிடம் கிரையம் வாங்கிய வகையிலும் பாத்தியம். அந்த பாகக்கறார் 1959ம் ஆண்டில் ஏற்பட்டது. முத்துசாமியிடம் எப்போது கிரையம் வாங்கினார் என்றால் சுமாராக 1967ம் ஆண்டுவாக்கில் வாங்கியிருப்பார், வருடம் சரியாக என்னால் சொல்ல முடியாது. அந்த பத்திரங்களை நான் பார்த்ததில்லை.

3. அப்புசாமி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அந்த கிரைய பத்திரத்தில் 1.50 ஏக்கர் எழுதப்பட்டிருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த அப்புசாமிக்கு 1.90 ஏக்கர் சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணத்தை பார்த்தேனா என்றால் ஆவணத்தை பார்த்தேன். எந்த ஆவணத்தை பார்த்தேன் என்றால் சிட்டா, பட்டாவை பார்த்தேன். அது எந்த ஆண்டிற்குரிய பட்டா, சிட்டா என்றால் 1988ம் ஆண்டில் பார்த்தேன். அந்த சொத்தில் கிணறு ஒன்று உள்ளது. வீடு அதில் இல்லை. அந்த அப்புசாமியை எனக்கு 1980ம் ஆண்டிற்கு முன்பாகவே எனக்கு தெரியும். தற்போதும் அப்புசாமியுடன் பேசிக்கொண்டுதான் வருகிறேன். 2005ம் ஆண்டில் யார் யாருக்கு இடையே பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் நடராஜ், சென்னியப்பன், ராமசாமி, விநாயகமூர்த்தி ஆகியோருக்கு இடையே பாகம் பிரித்துக்கொண்டார்கள்.

4. நான் இந்த நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. சென்னியப்பனை எனக்கு 1989ம்

ஆண்டிற்கு பின்புதான் தெரியும். நானும், சென்னியப்பனும் சடையம்பதி மாரியம்மன் கோவிலில் நிர்வாக பொறுப்பில் இருந்து வருகிறோம் என்றும், அதனடிப்படையில் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்களை நான் நேரில் பார்க்காமல் 4ம் பிரதிவாதி சென்னியப்பன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.04 19:22:11 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**